DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.166/2023

**Depositions of PW 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **லட்சுமி** | **Caste** | |
| **Father's Name** | **ரகுநாத்** | **Calling** | **மருத்துவர்** |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th Day of March 2026.

Signature of Witness.

**06.03.2026**

எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**
**(சாட்சி காணொளி வாயிலாக சாட்சியம் அளித்தார்)**

நான் தற்போது கேரளா மாநிலம், பத்தினம்திட்டாவில் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 24.05.2023 ஆம் தேதி இரவு 8.15 மணியளவில் நான் சிவகாசி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது புளுகாயியம்மாள் என்பவரை அவரது பேரன் பொன்மலை என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். மேற்படி புளுகாயியம்மாளை நான் விசாரித்தபோது அன்றைய தினம்

மாலை 5.45 மணியளவில் தோட்டத்தில் வைத்து தெரிந்த நபர் ஒருவர் கைகளாலும், காலாலும் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது வலது தோள்பட்டை மற்றும் இடுப்பு பகுதியில் வலி இருப்பதாக தெரிவித்தார். வலது கையை அசைக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார். தலையில் வலது பக்கத்தில் காதிற்கு மேல் பகுதியில் 1x1 செ.மீ அளவில் ரத்தகட்டு காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். புளுகாயியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். சாட்சியால் வழங்கப்பட்ட **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 புளுகாயியம்மாளுக்கு ஏற்பட்டுள்ள ரத்தகட்டு காயத்தினை தவிர மற்ற காயங்கள் வெளிப்படையான காயங்கள் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 புளுகாயியம்மாள் தனக்கு இடுப்பு மற்றும் தோள்பட்டை ஆகிய இடங்களில் வலி இல்லாமல் வலி இருப்பது போன்று பாவனையாக கூற வாய்ப்புள்ளது என்றால் அவரை நான் பரிசோதித்தபோது அவர் வலி இருப்பதாக உணர்ந்தார். அவரது வலது கை அசைக்க முடியாத அளவுக்கு இருந்தது. அ.சா.1 புளுகாயியம்மாளுக்கு வலது கை அசைக்க முடியாத அளவிற்கு இருந்ததாக கூறப்படுவதற்கு நுண்கதிர்படம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.